
# திராவிட மாடல் அரசு 57

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**







## ஏர் உலகம் மகிழும் ஏறுதழுவுதல் அரங்கம்!

தமிழ்ப் பண்பாட்டின் தனித்த அடையாளங்களில் ஒன்று பொங்கல் விழா. ஏனென்றால், அது மனிதர்கள் கொண்டாடும் விழா மட்டுமல்ல. மனிதர்களுக்கு உதவிய கால்நடைகளையும் இயற்கையையும் கொண்டாடும் விழா. மனிதர்கள் பொங்கலிட்டுக் கொண்டாட, கால்நடைகளை ஓடவிட்டுக் கொண்டாடுவார்கள். ஓடிப் பிடித்து விளையாடும் குழந்தைகளின் விளையாட்டுக்கு இணையானதுதான் மாடுகளை ஓடவிட்டு, அவற்றைத் துரத்தி, அவற்றைத் தழுவி விளையாடுவதும்.

உழவர்களின் வீடுகளில் மாடுகளும் குடும்ப அங்கத்தினர்கள்தான். சொல்லப் போனால், அவையும் அவர்களுக்கு குழந்தைகள்தான். அந்தக் குழந்தையோடு குழந்தையாக மனிதர்கள் சேர்ந்து விளையாடும் விளையாட்டுத்தான் ஏறுதழுவுதல். ‘எருது விடுதல்’, ‘மஞ்சு விரட்டு’, ‘ஜல்லிக்கட்டு’ என வேறு வேறு பெயர்களிட்டு அழைத்தாலும், ‘ஏறுதழுவுதல்’ என்று சொல்வதில் உள்ள அன்பும் அரவணைப்பும் வேறு சொற்களில் கிடைக்காது.

ஏறுதழுவுதல் குறித்து சங்க இலக்கியங்கள் தரும் சித்திரங்களை அறியாததாலும், திரைப்படங்கள் வாயிலாக, அதனைத் தமிழர்களின் வீரத்தின் அடையாளமாக மட்டுமே தமிழர் அல்லாதோர் பார்ப்பதன் விளைவுதான், அந்த விளையாட்டு ஏதோ முரட்டுத்தனமான, மனிதநேயமற்ற நிகழ்வாக தமிழ்நாட்டுக்கு வெளியில் பார்க்கப்படுகிறது. அதனால்தான் ‘பீட்டா’ போன்ற அமைப்புகள் தமிழர்களின் இந்த அடையாளத்தை மீண்டும் மீண்டும் குறிவைத்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

அந்தத் தவறான பார்வைகள், புரிதல்கள் ஆகியவைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்விதமாக, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’, கட்டியெழுப்பியிருக்கும் கலங்கரை விளக்கம்தான் மதுரையில் அமைந்திருக்கும் ‘கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்’.

### இந்தியாவின் முதல் கருப்பொருள் நூலகம்!



இந்தியாவிலேயே கால்நடை சார்ந்த ஒரு விளையாட்டுக்கு முதல் அரங்கம் அமைந்திருப்பது தமிழ்நாட்டில்தான் என்பது மட்டுமே பெருமை அல்ல. இந்தியாவிலேயே ‘திமாட்டிக் லைப்ரரி’ என்று சொல்லப்படும் கருப்பொருள் சார்ந்த நூலகம் முதன்முதலாக அமைந்திருப்பதும் தமிழ்நாட்டில்தான். அதுவும் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில்தான்!

இங்கு காளை மாடுகள், பசுக்கள், எருமைகள் முதலிய கால்நடைகள் பற்றிப் படிப்பதற்கான புத்தகங்களும் இதழ்களும் நிறைந்திருக்கின்றன. உழவர்கள் தாங்கள் வளர்க்கும் வேளாண் கால்நடைகளைப் பற்றிய அறிவை மரபுவழியாக அறிந்திருப்பினும், அந்த அறிவை மேலும் பெருக்கிக் கொள்ளவும் அதேநேரத்தில் வேளாண் மக்களின் மரபுவழி அறிவை அறிவியலுடன் இணைத்து ஆவணப்படுத்துவதும் இந்நூலகத்தின் நோக்கமாகும்.

அதனால்தான் இங்கு கால்நடைகள் தொடர்பான அச்சுப் புத்தகங்கள் மட்டுமின்றி ‘மாட்டு வாகடம்’ போன்ற ஒலைச்சுவடிகள், அரிய புகைப்படங்கள், துண்டுப் பிரசுரங்கள், வரலாற்று ஆவணங்கள், ஓவியங்கள், தமிழில் சமகாலத்தில் மேய்ச்சல் சமூகம், மெரினா புரட்சி மற்றும் கால்நடைகளை மையப்படுத்தி வெளியான இலக்கியப் படைப்புகள் முதலியவையும் உள்ளன.

மேலும் வேளாண்மைக்கு உதவும் கால்நடைகளுக்கு ஏற்படும் வியாதிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் நவீன கால்நடை மருத்துவ அறிவியல் சார்ந்து எழுதப்பட்ட ஆங்கில நூல்களையும் இங்கே படிக்கலாம். காங்கேயம், பர்கூர், மலை மாடு, உம்பளச்சேரி, புலிக்குளம் முதலிய தமிழ்நாட்டு மாட்டு இனங்கள் பற்றியும் இதர மாநில மாட்டு இனங்கள் பற்றியும் படிப்பதற்கான புத்தகங்கள் இங்கே உண்டு. ‘ஜட்கா வண்டிக்கும் ரயில் வண்டிக்கும் தர்க்கம்: மோட்டர் வண்டி மத்தியசம்’ என்பன போன்ற மாடுகளோடு தொடர்புடைய முச்சந்தி இலக்கியங்களும் இங்கே படிக்கக் கிடைக்கும்.

இங்கு அரிய பழைய இதழ்களும் உள்ளன. கால்நடைகள் குறித்து 1903-இல் தமிழில் வெளிவந்த முதல் இதழான ‘ஜந்துவர்த்தமான ஸாரம்’ எனும் இதழின் பிரதிகள், மற்றும் வேளாண்மைக்காக வெளிவந்த ’கிருஷிகன்’ எனும் இதழ் ஆகியவை தொகுக்கப்பட்டு இங்கே வைக்கப்பட்டுள்ளன. மாடுகள் தொடர்பாக ஏற்கெனவே அச்சுப் புத்தகங்களாகப் பதிப்பிக்கப்பட்ட சுவடிகள் நீங்கலாக, பதிப்பாகாத சுவடிகள் அச்சிடப்பட்டு இங்கே வைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 28 ஓலைச்சுவடிக் கட்டுகள் இங்கே உள்ளன.

இவற்றுடன், 20-ஆம் நூற்றாண்டில் இயங்கிய பல்வேறு ஜமீன்தார்களின் மாட்டுப் பண்ணைகள் பற்றிய புகைப்படத் தொகுப்பு, 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரெஞ்சு ஓவியர் ஒருவர் பிரெஞ்சு இந்தியப் பகுதியில் வரைந்த மாட்டுப் பொங்கல் நிகழ்வைக் காட்சிப்படுத்தும் நீர்வண்ண ஓவியம், 1806-இல் பொங்கல் பண்டிகையின் பொருட்டு முதல் மூன்று நாட்கள் விடுமுறை அளித்த ஆளுநர் லார்ட் வில்லியம் பெண்டிங் தலைமையிலான கவுன்சிலின் உத்தரவு, 1974-இல் சென்னையில் கலைஞர் அரசு நடத்திய ஏறுதழுவுதல் விழா, கலைஞரின் மாட்டு வண்டிப் பயணம் முதலிய ஆவணங்களையும் இங்கே பார்க்கலாம்.

### அடையாளம் காத்த கழகம்!

இந்த விளையாட்டு விழாவை, ஒன்றிய அரசு விலங்குகள் வதைச் சட்டத்தின் துணைகொண்டு தடைவிதிக்க முனைந்தபோது, தமிழரின் பண்பாட்டு உரிமை எனத் தன்னெழுச்சியாகச் சீறி எழுந்த தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு ஆதரவாக நின்றது கழகம். அப்படி நிற்பது அது முதல்முறை அல்ல. கடந்த 2006, 2007-ஆம் ஆண்டுகளில் இதே பிரச்சினை எழுந்தபோது, அப்போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான கழக அரசு, வலுவான வாதங்களை முன் வைத்து, தடையை நீக்கியது. பிறகு ‘திராவிட மாடல் அரசு’ அமைந்ததும் உச்ச நீதிமன்றத்தில் இந்த விளையாட்டுக்கு ஆதரவான தீர்ப்பைப் பெற்றுத் தந்தது நம் கழகம்.

அதன் தொடர்ச்சியாக, இந்த விளையாட்டுக்குப் பிரபலமான மதுரை அலங்காநல்லூரில், இந்த விழாவை நடத்த பிரமாண்டமான ஏறுதழுவுதல் அரங்கம் அமைக்கப்படும் என சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் 2022 ஏப்ரல் 21 அன்று அறிவித்தார் நம் கழகத் தலைவர் முதலமைச்சர். அந்த அறிவிப்பைச் செயற்படுத்தும் விதமாக 62 கோடியே 77 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2023 மார்ச் 18 அன்று கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

### மதுரையின் புதிய அடையாளம்!

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரைக்கு எத்தனையோ சிறப்புகள் இருப்பினும், ‘திராவிட மாடல்’ ஆட்சியில் மேலும் புதிய சிறப்புகள் சேர்ந்துள்ளன. மதுரைக்கு அருகில் கீழடி அருங்காட்சியகம், கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம் ஆகிய புதிய அடையாளங்களுக்குப் பிறகு, அந்த வரிசையில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கமும் இடம்பிடித்துள்ளது.

தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை மூலம் இந்தக் கட்டடத்தில் வாடிவாசல், ஒரே நேரத்தில் 5 ஆயிரம் பார்வையாளர்கள் அமர்ந்து காணும் வசதிகளுடன் மூன்றடுக்குப் பார்வையாளர்கள் மாடம், ஏறுதழுவுதல் நடைபெறும் இடம், மிக முக்கிய விருந்தினர்கள் அமரும் குளிரூட்டப்பட்ட இடம், ஏறுதழுவுதலில் பங்குபெறும் காளைகளின் எழுச்சி வடிவங்களைப் புலப்படுத்தும் அருங்காட்சியகம், ஒலி-ஒளிக் காட்சிக்கூடம், கால்நடை மருந்தகம், கால்நடைகள் தொடர்பான அதிலும் குறிப்பாக மாடுகள் தொடர்பான பழைய இதழ்கள், நூல்கள் ஆகியவற்றைக் கொண்ட நூலகம், மாடுபிடி வீரர்களுக்கான தங்கும் அறைகள், புல்வெளிகளுடன்கூடிய தோட்டம் என அனைத்தும் உள்ளன.

சுமார் 83 ஆயிரத்து 500 சதுர அடி பரப்பளவில் அமைந்திருக்கும் இந்த ஏறுதழுவுதல் அரங்கம், ஒவ்வோர் ஆண்டும் ஜனவரியில், பொங்கல் விழாவின்போது ஏறுதழுவுதல் நிகழ்ச்சியை நடத்திவரும் விவசாயிகளுடன் இணைந்து கட்டப்பட்டுள்ளது. இதனை 2024 ஜனவரி 24 அன்று நமது முதலமைச்சர் திறந்து வைத்தார்.

### பாதுகாப்புக்கு முன்னுரிமை

இதுவரை மதுரையின் சுற்றுப்புறங்களில் உள்ள கிராமப் பகுதிகளில், குறுகலான நெரிசல் மிகுந்த தெருக்களில் ஏறுதழுவுதல் நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன. இதனால் மக்களுக்கும் மாடுகளுக்கும் பல பாதிப்புகள் ஏற்பட்டு வந்தன. அவை குறித்து மதுரை மாவட்ட மக்களின் இதயங்களில் இருந்துவந்த கவலைகளை அகற்றும் வகையில், எழுப்பப்பட்டுள்ளது இந்த அரங்கம்.

இந்தப் புதிய ஏறுதழுவுதல் அரங்கம், தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கு உதவும். ஏறுதழுவுதல் நிகழ்ச்சிகளுடன் மாவட்ட நிர்வாகம் மற்றும் விளையாட்டுத் துறையின் வழக்கமான போட்டிகளை நடத்துவதற்கும் பயன்படும். இந்த மிகப்பெரிய அரங்கம் ஏறுதழுவுதல் வீரர்களையும் பார்வையாளர்களையும் ஈர்க்கும் வகையில், அலங்காநல்லூர் அருகில் உள்ள மலையடிவாரத்தில் இயற்கை எழில் சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ளது. புல்வெளிகளும் தோட்டங்களும் கொண்டுள்ள இந்த அரங்கம் ஆண்டுமுழுவதும் சுற்றுலாவுக்குப் பயன்படுவதுடன், ஏறுதழுவுதல் நடைபெறாத காலங்களில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துவதற்கும் உதவும்.

ஏர் பிடித்த உலகத்தோருக்கு ‘திராவிட மாடல்’ காட்டிய நன்றியாக ஏறுதழுவுதல் அரங்கம் தமிழர்களால் நினைவுகூரப்படும்..!

...சாதனை தொடரும்

### ஜனநாயகத்தைக் காக்க ஒரு வீடியோ!

இந்திய ஜனநாயகத்தை ஒன்றிய அரசு சிதைத்து வருவது குறித்து, பிரபல யு டியூபர் துருவ் ராத்தே ஒரு வீடியோ வெளியிட்டுள்ளார். நாட்டில் ஜனநாயகம் முடிந்துவிட்டதா? என்கிற கேள்வியுடன் தொடங்கும் அவர், ஒன்றிய பா.ஜ.க. அரசு, இந்தியாவின் அரசியலமைப்பைச் சிதைத்து வருவதைத் தரவுகளுடன் விளக்குகிறார். முக்கியமாக இந்தியில் உரையாடும் இந்த வீடியோ ஒரே நாளில், 62 லட்சம் பார்வைகளைக் கடந்துள்ளது.

நீதிமன்றம், தேர்தல் ஆணையம், புலனாய்வு விசாரணை அமைப்புகள் ஆகியவற்றை பாரதிய ஜனதா கட்சி தனக்கு சாதமாக வளைத்துக் கொண்டுள்ளதுடன், எதிர்க்கட்சிகளின் வாய்ப்புகளை முடக்குவதற்குப் பயன்படுத்தி வருகிறது. பா.ஜ.க.வின் தேர்தல் விதிமீறல்களுக்கு எதிராக இருந்த தேர்தல் ஆணையர் அசோக் லவாசா வெளியேற்றம், சமீபத்தில் ஆயுஷ்மான் பாரத் திட்ட முறைகேடுகளைக் கண்டுபிடித்த இந்திய கணக்குத் தணிக்கையாளர் (சி.ஏ.ஜி.) அதிகாரிகள் இடமாற்றம் என சர்வாதிகார ஆட்சிபோல பா.ஜ.க. நடந்து வருகிறது. இவற்றைக் கேள்வி எழுப்ப வேண்டிய ஊடகங்கள், பா.ஜ.க. செய்தி தொடர்பாளர்களின் வேலைகளைச் செய்து வருகின்றனர் என அடுக்கடுக்காக அவர் முன்வைக்கும் வாதங்களை யாராலும் மறுக்க முடியாது.

“இந்த நிலைமை நீடித்தால், ஜனநாயகம் ஏட்டில் மட்டும்தான் இருக்கும். தேர்தல்கள் நடக்கும். ஆனால், உண்மையான ஜனநாயகம் அதன் கடைசிமூச்சை விட்டிருக்கும்” என அவர் முடிக்கும்போது பார்வையாளர்கள் ஒரு முடிவுக்கு வந்திருப்பர்.

### ஃப்ளாஷ்பேக்



### டேக்வாண்டோ தொண்டர்கள்!

2002-இல், தற்காப்புப் பயிற்சி பெற்ற வலுவான தொண்டர் அணியை உருவாக்க எண்ணினார் தலைவர் கலைஞர். அதனால் தொண்டர் அணியினருக்கு, தற்காப்புக் கலையான ’டேக்வாண்டோ’ உடன் கூடிய உடற்பயிற்சியினை என் மூலமாக அளிப்பதற்கு ஏற்பாடு செய்தார். கழகம் எதிர்க்கட்சியாக இருந்த காலகட்டம் முழுக்க தலைவர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் எங்கள் அணி பாதுகாப்புக்கு உடன் செல்லும். 2006- ஆம் ஆண்டு அவர் முதலமைச்சர் ஆகும் வரை இந்த வழக்கம் நடைமுறையிலிருந்தது. அப்படி 2002-ஆம் ஆண்டு அண்ணா அறிவாலய வளாகத்தில் ‘அண்ணா உடற்பயிற்சி மையம்’ தொடங்கி வைத்தபோது, டேக்வாண்டோ பயிற்சி பெற்ற தொண்டர் அணியினருடன் தலைவர் கலைஞர் பேராசிரியர் அவர்களும் எடுத்துக்கொண்ட புகைப்படம்.



பெ.சேகர்

**-மாஸ்டர் பெ.சேகர், மாநிலச் செயலாளர், தி.மு.க. தொண்டர் அணி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033 -24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

### தேனிலவு முடிந்தது!

**1967 ஏப்ரல் மாதம், அண்ணா முதலமைச்சரானதும் முதல் முறையாக டெல்லி சென்றார். அங்கு செய்தியாளர்கள் சந்திப்பின்போது, ‘தி.மு.கவுடன் தேனிலவு முடிந்துவிட்டது’ என ராஜாஜி அவர்கள் வெளியிட்ட அறிக்கை குறித்து கருத்து கேட்டனர். பெரியாரை அண்ணா சந்தித்தது பிடிக்காத காரணத்தால் ராஜாஜி அந்த அறிக்கையை வெளியிட்டிருந்தார். ஆனால், ‘ராஜாஜி அவர்கள் சொன்னது உண்மைதான். தேனிலவுக்குப் பின் குடும்ப வாழ்க்கை தொடங்குகிறது’ என அண்ணா அளித்த பதில் வரலாற்றில் எழுதப்பட்டது.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 400




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131